ஸ்ரீ ராம ஜெயம்

'ஹரி ஓம் நமோ நாராயணாய நமஹ'

# தற்கால இளைஞர்களுக்கு...



## ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோவில்

வட்டக்கச்சி – கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்மவர் நாட்டு
# ஞான வாழ்க்கை

## இந்திய வாழ்க்கை முறையில் வேதாந்தத்தை செயல் முறைக்கு கொண்டு வருதல்

நமது மதமும் மக்களும் சாதாரணமாக இந்து என்று அழைக்கப்படுகிறார்கள். 'வேதாந்தம்' என்பதைப் பற்றி நான் கூறப்போகும் விளக்கத்தைப் புரிந்து கொள்ள, 'இந்து' என்ற இந்தச் சொல்லையும் அறிய வேண்டியது அவசியம். பழங்காலப் பாரசீகர்கள் 'ஸிந்து' நதியை 'ஹிந்து' என்று அழைத்தார்கள். சமஸ்கிருதத்தில் 'ஸ' என்ற சப்தம் பாரசீகத்தில் 'ஹ' என்று மாறிற்று. எனவே 'ஸிந்து' ஹிந்து ஆயிற்று. கிரேக்கர்களுக்கு 'ஹ' வை உச்சரிப்பது கஷ்டமாயிருந்தது. ஆதலால் அந்த 'ஹ' சப்தமும் போய் 'இந்தியர்'களானோம். 'ஹிந்து' என்ற சொல்லுக்கு சிந்து நதிக்கு இந்தப் பக்கத்தில் இருப்பவர்கள் என்று பொருள். அக்காலத்தில் அந்தவார்த்தை பொருத்தமாக இருந்திருக்கலாம். ஆனால் இன்று அது பொருந்தாது. ஏனெனில் சிந்து நதிக்கு இக்கரையில் இப்போது இந்துக்களை தவிர,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகமதியர்கள், பார்சிகள் , கிறிஸ்தவர்கள், பௌத்தர்கள், சமணர்கள் முதலியவர்களும் இருக்கிறார்கள். எனவே ஹிந்து என்ற வார்த்தை இவர்கள் அனைவரையும் குறிக்க வேண்டும். ஆனால் அவர்கள் இந்து மதத்தை சேர்ந்தவர்கள் என்று சொல்ல முடியாது. பலவிதமான மத நெறி முறைகளையும் கருத்துக்களையும் பண்பாட்டு முறைகளையும் உடைய நம் மதத்திற்கு வேறு ஒரு பொதுப்பெயர் கண்டுபிடிப்பது கடினமான காரியம். இந்த வேறுபட்ட பிரிவுகளைப் பிணைக்கக்கூடிய விஷயம் ஒன்றுதான் எல்லோரும் வேதங்களை ஒப்புக் கொள்கிறார்கள். வேதங்களை ஒப்புக் கொள்ளாதவர்களை இந்து என்று சொல்ல முடியாது.

வேதங்கள் கர்மகாண்டம், ஞானகாண்டம் என்று இருபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருப்பது உங்களுக்குத் தெரியும். கர்மகாண்டம் பலவிதமான யாகங்களைப்பற்றிச் சொல்கிறது. தற்போது அவற்றுள் பல பழக்கத்தில் இல்லை. ஞான காண்டத்தில், வேதங்களின் சாரத்தைத் திரட்டி எடுத்தது போல் உபநிடதங்கள் இருக்கின்றன. இதை வேதாந்தம் என்று சொல்கிறார்கள். நம்முடைய மத ஆசாரியர்கள், துவைதிகள், விசிஷ்டாத்வைதிகள், அத்வைதிகள், அனைவரும் வேதாந்தத்தை மிக உயர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமாணமாக ஒப்புக்கொள்கிறார்கள். அதை ஒப்புக்கொள்ளாத எந்தப் பிரிவும் வைதிகத்துக்குப் புறம்பாகி விடுகிறது. ஆதலால் நாடு முழுவதும் உள்ள இந்துக்களைத் தற்காலத்தில் ஒரு பெயர் கொண்டு அழைக்கலாமெனில் அதற்கேற்ற பெயர் 'வேதாந்திகள்' அல்லது 'வைதிகர்கள்' என்பதாகத்தான் இருக்க வேண்டும் என்று நினைக்கின்றேன். இந்தப் பொருளில் தான் வேதாந்தி அல்லது வேதாந்தம் என்ற வார்த்தைகளை நான் உபயோகப்படுத்துகின்றேன். இந்தக் கருத்தை இன்னும் தெளிவாக்க வேண்டும். ஏனெனில் சமீப காலத்தில் வேதாந்தம் என்ற சொல் அத்வைதம் என்னும் பொருளிலேயே சாதாரணமாக உபயோகப்படுத்தப்படுகிறது. ஆனால் உண்மையில் வேதாந்தத்தை அடிப்படையாக கொண்ட தத்துவ முறைகளில் அத்வைதமும் ஒன்று. விசிஷ்டாத் வைதிகளும் வேதாந்தத்தையே பின்பற்றுகிறார்கள்; தங்கள்நெறிக்கும் வேதாந்தத்தையே அடிப்படையாகக் கொண்டிருக்கிறார்கள். இங்கனமே துவைதிகளும் மற்றவர்களும்.

ஆனால் வேதாந்தம் என்றால் அத்வைதம் என்று மக்கள் சாதரணமாக நினைப்பதற்கு ஒரு காரணம் உண்டு. வேதங்களுக்கு அடுத்ததாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றை விளக்க ஸ்மிருதிகளும் புராணங்களும் ஏற்பட்டன. வேதங்களுக்கு உள்ள அதிகாரம் இவற்றுக்கு இல்லை. புராணங்களும் ஸ்மிருதிகளும், சுருதிகள் அதாவது உபநிடதங்களிலிருந்து வேறுபட்டால் சுருதிகளையே பின்பற்ற வேண்டும் என்பது நியதி. சங்கரரின் அத்வைத நெறிக்கு அவர் பெரும்பாலும் உபநிடதங்களிலிருந்தே மேற்கோள்கள் காட்டியுள்ளார். ஏதோ ஓரிரு இடங்களில் மட்டுமே ஸ்மிருதியை காட்டுகிறார். ஆனால் பிரிவினர்கள் அதிகமாக ஸ்ருதிகளையும் குறைவாக சுருதிகளையும் ஆதாரமாக கொண்டிருக்கிறார்கள்.

துவைத நெறிகள் அளவுக்கு மீறி ஸ்மிருதிகளையும் புராணங்களையும் கையாள்கின்றன. இதனால்தான் அத்வைதிகள் மட்டுமே சரியான வேதாந்திகள் என்று கருதப்பட்டு வந்தார்கள் போலும்.

அது எப்படியிருந்தாலும் வேதாந்தம் என்ற சொல் இந்து மத நெறிகள் அனைத்தையும் குறிக்கும். வேதாந்தம் வேதத்தில் ஒரு பகுதி. உலகில் உள்ள நூல்களிலேயே மிகப் பழமையானவை வேதங்கள் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்கிறார்கள். நவீன ஆராய்ச்சியாளர்கள் என்ன சொன்னாலும், வேதங்கள் சிறிது சிறிதாக எழுதப்பட்டதாக இந்துக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்புக்கொள்வதில்லை. அவை ஒரே சமயத்தில் உண்டாக்கப்பட்வை. அல்லது வேறு விதமாக சொல்வதானால், அவை ஒரு பொழுதும் உண்டாக்கப்படவே இல்லை; அவை எப்பொழுதும் இறைவனின் மனத்தில் இருந்து கொண்டிருக்கின்றன. வேதாந்தம் என்பது துவைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம் முதலிய அனைத்தையும் தன்னுள் கொண்டதாக இருக்கிறது பௌத்த மதத்தையும் சமண மதத்தையும் கூட அவர்கள் விரும்பினால் நாம் ஏற்றுக்கொள்ளலாம். நம் இதயம் அதற்குப் போதுமான அளவு விசாலமானதாக இருக்கிறது. ஏனெனில் நன்றாக ஆராய்ந்து பார்த்தால் பௌத்தத்தின் சாரம் முழுவதும்உபநிடதங்களிலிருந்து எடுக்கப்பட்டிருப்பதை காணலாம். அவர்களின் அந்த அற்புதமான நல்லொழுக்க நியதிகள் கூட வார்த்தைக்கு வார்த்தை அப்படியே பல உபநிடதங்களில் இருப்பதைக் காணலாம். அவ்விதமே சமணர்களின் நல்ல கொள்கைகள் அனைத்தும்.

இந்திய மதக் கருத்துக்களில் பிற்காலத்தில் ஏற்பட்ட வளர்ச்சியின் ஆரம்பம் அனைத்தும் உபநிடதங்களில் இருக்கின்றன. உபநிடதங்களில் பக்தி என்னும் லட்சியம் இல்லை என்று சிலர் சொல்கிறார்கள். உபநிடதங்களை ஆராய்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தவர்களுக்கு, இவர்கள் சொல்வது தவறெனத் தெரியும். நீங்கள் சரியாகப் பார்த்தால், ஒவ்வோர் உபநிடத்திலும் பக்திக்கொள்கைகளைக் காணலாம் பிற்காலத்தில் ஆவணங்களிலும் ஸ்மிருதிகளிலும் அதிக விரிவாகக் காணப்படும் கருத்துக்கள் உபநிடதங்களில் விதைகளாக இருக்கின்றன. விதைகளாக இருந்த அவை புராணங்களில் வளர்ச்சி பெற்று விவரிக்கப் பட்டுள்ளன. இந்திய மக்களிடையே மலர்ந்திருக்கும் ஒவ்வொரு நெறிகளுக்கும் வித்து உபநிடதங்களில் இருப்பதைக் காணலாம். உபநிடதங்களைப் படிக்காத சிலர் பக்தி நெறி வெளி நாட்டிலிருந்து வந்திருப்பதாக கூறுகிறார்கள். அவர்களின் கூற்றை எண்ணினால் சிரிப்புத்தான் வருகிறது. இது தவறென்று நிரூபிக்கப்பட்டிருப்பது உங்களுக்கு தெரியும். பக்திக் கருத்துக்கள் உபநிடதங்களில் மட்டும் அல்ல, அவற்றுக்கு முற்பட்ட சம்ஹிதைகளிலும் இருக்கின்றன. சம்ஹிதைகளில் பயத்தின் காரணமாக பக்தி இருப்பதை காண்கிறோம். வருணம் அல்லது மற்றத் தெய்வங்களை வழிபடுபவர்கள் தங்கள் பாவங்களை எண்ணி அவர்களுக்கு எதிரில் நடுங்குவதையும் பார்க்கிறோம். ஆனால் உபநிடதங்களில் பயத்தை அடிப்படையாக கொண்ட மதம் காணப்படவில்லை. அங்கு காணப்படும் மத உணர்ச்சி அன்பையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவையும் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

இந்த உபநிடதங்களே நமது சாஸ்திரங்கள். இவை பலவாறாக விளக்கப்பட்டுள்ளன. நான் முன்னரே கூறியது போல், வேதங்களுக்கும் புராணங்களுக்கும் வேறுபாடுகள் தோன்றினால் வேதங்களையே நாம் பின்பற்ற வேண்டும். ஆனால் நாம் இன்று நடை முறையில் நூற்றுக்கு தொன்னூறு பங்கு புராணங்களையும் நூற்றுக்கு பத்து பங்கே உபநிடதங்களையும் பின்பற்றி வருகிறோம். ஒன்றுக்கொன்று முரண்பட்டதாக பழக்க வழக்கங்களையும், சாஸ்திரங்களில் ஆதாரமில்லாத பல கருத்துக்களையும் நாம் இப்போது கடைப் பிடித்து வருகிறோம். வேதங்களிலும், சுருதி அல்லது ஸ்மிருதி முதலிய எந்த சாஸ்திரங்களிலும் கூறப்படாத பல பாகங்களிலும் காணப்படுவது ஆச்சரியமாக இருக்கிறது. எனினும் அந்த ஒரு பழக்கம் மாறினாலும் தான் இந்துமதமே அழிந்து விட்டதாக அந்தப் பாமர கிராமவாசி நினைக்கிறான். அவனைப் பொறுத்த வரையில் வேதாந்தமும் அந்த கிராம பழக்க வழக்கங்களும் ஒன்றே. அவன் செய்வதற்கு சாஸ்திர சம்மதம் இல்லை என்பதையும், அதை விட்டுவிட்டால் எவ்விதத் தீமையும் இன்றி நன்மையே அடைவான் என்பதையும் அவன் உணர்வதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவதாக, சிக்கல் இருக்கிறது. நமது சாஸ்திரங்கள் எண்ணிறந்தவை. சாம வேதத்திற்கு ஆயிரம் கிளைகள் இருந்ததாக பதஞ்ஜலி மகாபாஷ்யத்தில் படிக்கிறோம். அவை எல்லாம் என்ன ஆயின என்று ஒருவருக்கும் தெரியாது. அப்படியே ஒவ்வொரு வேதமும், இந்த நூல்களின் பெரும்பகுதி மறைந்துவிட்டது, சிறிய பகுதிகளே நமக்கு கிடைத்துள்ளன.

வேதங்களில் பல பாகங்களை, குறிப்பிட்ட குடும்பங்கள் பயின்று பாதுகாத்து வந்தன. அன்னியர் படையெடுப்பின் காரணமாகவோ அல்லது வேறு எந்த வித்திலயோ இவற்றுள் பல குடும்பங்கள் அழிந்தன. அவற்றுடன் அவை பாதுகாத்து வந்த நூல்களும் அழிந்து பட்டன. நாட்டின் ஒரு பகுதியில் நிலவும் பழக்கத்திற்கும் கருத்திற்க்கும் முரண் ஏற்பட்ட சமயங்களில், இந்தப் பழக்கம் எழுதப்பட்டிருந்த மதத்தின் பாகம் அழிந்துவிட்டதென்று சிலர் வாதாடுவதுமுண்டு. வேதங்களை எதிர்த்து ஒரு நெறியை ஆரம்பிக்க விரும்புபவர்களுக்கும் இந்த வாதம் ஒரு சஞ்சீவியாகப் பயன்பட்டது. இவ்வளவு மாறுபாடான பாட பேதங்கள், விளக்கவுரைகள் இவற்றுக்கு நடுவில் நிகழும் உண்மையைக் கண்டு பிடிப்பது மிகச் சிரமமான காரியம். ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையாக, இவற்றை ஒற்றுமைப்படுத்தக்கூடிய பொதுவான அம்சமொன்று நிச்சயமாக வேண்டுமென்று புலப்படுகிறது. இல்லாவிடில் அவை இவ்வளவு காலம் நீடித்திருக்க முடியாது.

நம் உரையாசிரியர்களிடம் வரும் போது இன்னுமொரு பெரும் கஷ்டம் தென்படுகிறது. அத்வைததாதி அத்வைதப் பொருள் தரக்கூடிய சுலோகங்கள் வரும் போது, அவற்றை அப்படியே வைத்துக்கொள்கிறார், ஆனால் துவைதம் தருபவற்றை பலவிதமாகப் பிரித்தும் திரித்தும் அசம்பாவிதமாகப் பொருள் கூறுகிறார். சில இடங்களில் 'அஜா' என்ற சொல்லுக்குப் பிறப்பில்லாதது என்று பொருள் செய்ய வேண்டியிருக்க, அதற்குப் 'பெண் ஆடு' என்ற விசித்திரப் பொருள் கொடுக்கிறார். இவ்வாறே துவைதவாதிகள், துவைதப்பொருள் கொடுக்கும் சுலோகங்களை அப்படியே வைத்துக்கொண்டு, அத்வைதப்பொருள் கொடுக்கும் ஒவ்வொரு சுலோகத்தையும் சித்திரைவதை செய்து, விருப்பம் போல் பொருள் செய்கிறார்கள். சமஸ்கிருத மொழியின் நுட்பமும், வேதத்தின் பழமையும், சமஸ்கிருத இலக்கணத்தின் தன்மையும், ஒரு வார்த்தையின் பொருளுக்காக நாள் கணக்காக விவாதம் செய்யவும் இடம் கொடுக்கின்றன. ஒரு பண்டிதன் நினைத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளற்ற சொற்களைக்கூட வாதத்திறமையால் மேற்கோள்கள் காட்டிச் சரியான சமஸ்கிருதமாக நிரூபித்து விடுவான். உபநிடதங்களைச் சரியாகச் செய்வதில் இவ்வளவு கஷ்டங்கள் இருக்கின்றன. ஆனால் துவைதத்திலும் அத்வைதத்திலும் ஆழ்ந்த அனுபூதி பெற்று, ஒரே சமயத்தில் உயர்ந்த ஞானியாகவும் பக்தராகவும் இருந்த ஒரு மகானுடன் வாழும் அரிய வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அவருடன் இருந்ததால் வேறு வேறு பொருள் கொடுக்கும் உரையாசிரியர்களைக் குருட்டுத்தனமாக நம்பாமல், நான் சுயமாகவே அவர்களை விட நல்ல முறையில் பொருள் செய்ய முடியுமா என்று முயற்சி செய்து பார்த்தேன். அந்த ஆராய்ச்சியின் காரணமாக அந்தத்தத்துவங்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை அல்ல என்ற முடிவுக்கு வந்தேன். எனவே சுலோகங்களை கொலை செய்து அவற்றுக்கு வேறு பொருள் செய்ய வேண்டிய அவசியமே இல்லாமல் போய் விடுகிறதல்லவா? ஆகா! அந்த சுலோகங்கள் அழகாகவும் அற்புதமாகவும் இருக்கின்றன! அவற்றுள் ஒன்றுக்கொன்று முரண்பாடில்லை. ஆனால் மிகவும் ஆச்சரியமான ஒற்றுமை காணப்படுகிறது. அவை நம்மை ஒரு கருத்திலிருந்து மற்றொரு கருத்துக்குப் படிப்படியாக அழைத்துச் செல்லுகின்றன. எல்லா உபநிடதங்களிலும் நான் கண்ட உண்மை இதுவே;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை துவைதக் கருத்துக்களில் ஆரம்பித்து உன்னதமான அத்வைதத்தில் முடிவடைகின்றன.

எனவே, துவைதிகளும் அத்வைதிகளும் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்பதை இந்த மகானின் வாழ்க்கையின் வாயிலாக நான் அறிந்து கொண்டேன். இருவருக்கும் நம் தேசிய வாழ்க்கையில் மகத்தான இடமிருக்கிறது. நமது மத வாழ்க்கையில் அத்வைதத்தைப்போல்துவைதமும் இன்றியமையாதது. ஒன்றில்லாமல் மற்றொன்று இருக்க முடியாது. ஒன்று மற்றொன்றைப் பூர்த்தி செய்கிறது. ஒன்று கட்டிடம், மற்றொன்று அதன் மாடி. ஒன்று வேர், மற்றொன்று பழம். எனவே உபநிடத வாக்கியங்களைத் திரித்து வேறு பொருள் செய்ய முயற்சி செய்வது அறிவீனமாகும். உபநிடதங்களின் மொழி அற்புதமாக இருக்கிறது. அவை உலகிலயே உயர்ந்த ஆன்மிக உணர்ச்சியையும் தெரிவிப்பதுடன் மனித குலம் மோட்சமடைய வழிகாட்டியாகவும் இருக்கின்றன. தவிர, மனிதனின் உன்னதமான மனநிலையை வர்ணித்திருக்கும் இலக்கியங்களிலே இவை மிக அழகாக இருக்கின்றன. இந்துக்களின் மனம் உள்நோக்கிச் செல்லும் இயல்புடையது, என்னும் தனிப்பெருமை உபநிடதங்களில் தெளிவாகத் தென்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா நாட்டு இலக்கியங்களிலும் மனிதனின் உன்னதமான நிலைகள் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவை அனைத்தும் அநேகமாக தூல மொழியில் விவரிக்க முயன்றிருக்கின்றன.

உதாரணமாக, மில்டன், தாந்தே, ஹோமர் முதலிய மேல்நாட்டுக் கவிஞர்களை எடுத்துக் கொள்ளுங்கள். அவர்களின் கவிதைகளில் மிக ஆழகான பகுதிகள் இருக்கின்றன. ஆனால் அவற்றுள் அந்த அளவற்ற பரம்பொருளைத் தூலமாகவும் புலன்களின் மூலமாகவும் உடல் வலிமையின் மூலமாகவும் வெளிப்படுத்த முயற்சி செய்யப்பட்டிருக்கிறது. நம் சம்ஹிதைகளில் கூட இந்த முயற்சியைக் காண்கிறோம். படைப்பை விவரிக்கும் அந்த அழகான ரிக்குகள் உங்களுக்குத் தெரிந்திருக்கும். அவற்றிலும் அந்த மிக உன்னத நிலை தூல மொழியிலயே விவரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எல்லையற்ற பரம்பொருளை எல்லைக்குட்பட்ட ஒன்றால் சொல்ல முடியாதென்பதை அவர்கள் சீக்கிரத்திலயே உணர்ந்தனர். ஆதலால் அவர்கள் வேறுவித மொழியைக் கையாண்டனர். உபநிடதங்களின் மொழி புதிய முறையாக இருக்கிறது அதாவது எதிர்மறையாகவும், ஒரு வரம்புக்கு உட்பட்டதாகவும் இருக்கிறது. நம்மைப் புலன்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பால் அழைத்துக் கொண்டுபோய், புலன்களால் அறிய முடியாத ஒன்றைக் காண்பித்து, அதைப்புரியா விட்டாலும் அது இருக்கிறது என்ற நிச்சயத்தை நம் மனத்தில் ஏற்படுத்துகிறது. உலகில் எந்த மொழி இதற்கு ஈடாகும்? 'அங்கு சூரியன் ஒளிர்வதில்லை; சந்திரனும், நட்சத்திரங்களும், மின்னலின் ஒளியும் பிரகாசிக்காது. அப்படியிருக்க இந்த சிறு நெருப்பு என்ன செய்யும்? தவிர உலகம் முழுவதிலும் தத்துவ ஆராய்ச்சியின் முடிவும், இந்துமதத்தின் முடிவுமான கருத்தை வேறு எங்கு இவ்வளவு அழகாகவும் அற்புதமாகவும் சொல்லியிருப்பதைக் காணமுடியும்?

'ஒரு மரத்தில் இரண்டு அழகான பறவைகள் ஒன்றுக்கொன்று மிகுந்த அன்புடன் அமர்ந்து கொண்டிருக்கின்றன. ஒன்று அந்த மரத்தின் பழங்களைத் தின்று கொண்டிருக்கின்றது. மற்றொன்று உண்ணாமல் அமைதியாகவும் கம்பீரமாகவும் உட்கார்ந்து கொண்டிருக்கின்றது. கீழ் இருக்கும் பறவை இனிப்பும் கசப்புமான பழங்களைத் தின்பதால் மகிழ்வையும் துன்பத்தையும் மாறி மாறி அடைகிறது. மற்றொன்று எதையும் உண்ணாமல், சுகத்தையும் துக்கத்தையும் நாடாமல் தன்னுடைய மகத்தான தன்மையிலேயே மூழ்கிக் கம்பீரமான தோற்றத்துடன் மேல் கிளையில் வீற்றிருக்கிறது. இது மனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மாவின் சித்திரமாகும். மனிதன் பொருளையும் இன்பத்தையும் இதர ஆசைகளையும் நாடி, இன்று தோன்றி நாளை மறையும் தன்மையுடைய சுகத்தையும் துன்பத்தையும் பின்பற்றுகின்றான்.

உபநிடதங்களில் பல இடங்களில், மனித ஆன்மா தேர்ப்பாகனுக்கும், புலன்கள் கட்டுக்கடங்காமல் மதம் பிடித்த குதிரைகளுக்கும் ஒப்பிடப்பட்டிருக்கின்றன. குழந்தைகள் ஒளிமயமான இன்பக் கனவுகளில் மிதப்பதும், பின்னர் அவையனைத்தும் வீண் எனக் காண்பதும், வயதானவர்கள் தங்கள் கடந்த காலத்தை எண்ணி இம்மாய வலையிலிருந்து வெளியேறிச் செல்ல முடியாமல் திண்டாடுவதும் இதுதான் மனித வாழ்கையின் இயல்பாக இருக்கிறது. எனினும் ஒவ்வொருவரின் வாழ்கையிலும் சிலவேளைகளில் ஒளி மிக்க நேரம் தோன்றுகிறது. ஆழ்ந்த துன்பத்தின் நடுவில் ஏன், சில சமயங்களில் பெருத்த மகிழ்ச்சியின் நடுவில் கூட, நம் மனத்தைச் சூழ்ந்துகொண்டிருக்கும் இருளின் சிறு பகுதி, சூரியனை மறைத்துக் கொண்டிருக்கும் மேகம் விலகுவது போல விலகுகிறது; நம்மையும் அறியாமல் புலன்களுக்கு அப்பால் உலகச் சுகதுக்கங்களுக்கும் அப்பால் இயற்கைக்கும் நாம் நினைத்துக் கொண்டிருக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு இன்பங்களுக்கும் பொன், புகழ் முதலிய அனைத்தையும் கடந்து நிற்கும் பரம்பொருளின் ஒளியைக் கணநேரமேனும் அப்போது காணப்பெறுகிறோம். இந்த ஒளியைக் கண்டு மனிதன் நின்று யோசிக்கிறான்; இனிப்புப் பழத்தையும் கசப்புப் பழத்தையும் உண்ணாமல், தன் ஆன்மாவிலயே திளைத்து ஆனந்தமாகவும் கம்பீரமாகவும் வீற்றிருக்கும் அந்த மற்றொரு பறவையைப் பார்க்கிறான். கீதை கூறுவது போல், யார் ஆன்மாவையே நினைத்தவனாய், ஆன்மாவைத் தவிர வேறொன்றும் வேண்டாதவனாய், ஆன்மாவிலயே திருப்தி கொண்டவனாய் இருக்கிறானே, அவனுக்கு என்ன வேலை இருக்க முடியும்? ஏன் அடிமை போல வேலை செய்ய வேண்டும்? மனிதன் அந்த நித்தியமான பொருளின் ஒளியைக் காண்கிறான். ஆனால் அதை மறந்து மீண்டும் சுக துக்கத்தை அனுபவிக்கிறான். சிறிது காலத்திற்குப் பிறகு மீண்டும் அவ்வொளியைக் காண்கிறான். அடிமேல் அடி விழ விழ கீழ்ப்பறவை மேற்பறவைக்கு அருகில் மெள்ள மெள்ளச் செல்கிறது. அடி பலமானதாக இருந்தால் தனக்கு உயிருக்குயிராகவும் நண்பனாகவுமிருக்கும் மேற்பறவையின் அருகில் சீக்கிரம் செல்கிறது. அருகில் செல்லச் செல்ல, மேற்பறவையைச் சூழ்ந்திருக்கும் ஒளி தன்னைச் சுற்றியும் உண்டாவதைக் காண்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனை நெருங்க நெருங்க, தான் என்பது மறைந்து மேற்பறவையுடன் அப்படியே ஒன்றாகி விடுகிறது. தான் உண்மையில் வேறல்ல என்பதையும், மேல்கிளையில் கம்பீரமாக வீற்றிருந்த அந்த மேற்பறவையின் பிரதிபிம்பமே தான் என்பதையும் உணர்கிறது. எல்லாம் அதன் ஒளி. அந்த ஒளியில் கலந்து இதுவும் பூரணத் திருப்தியும் சக்தியும் கம்பீரமும் பெறுகிறது. இந்தச் சித்திரத்தில் உபநிடதங்கள் நம்மை துவைதத்திலுருந்து அத்வைதத்திற்கு அழைத்துச் செல்கின்றன. உபநிடதங்களில் நிறைந்திருக்கும் கவித்துவத்தையும் மனிதனுடைய உன்னதமான நிலையை அவை வெகு அழகாகச் சித்தரித்துக் காட்டும் தன்மையையும், அவற்றில் நிறைந்திருக்கும் மிக உயர்ந்த கருத்துக்களையும் விளக்கி காட்டுகின்ற அருமையான பகுதிகளைக் கணக்கில்லாமல் எடுத்துக்காட்டலாம். ஆனால் அதற்கு இப்போது நேரமில்லை. அவற்றின் மொழி நடையோ கத்தி முனைபோல் கூர்மையாக, சம்மட்டியடிபோல் வலிவுடன், நேராக மனத்தில் பதிக்கின்றது; பொருளில் குழப்பமில்லாமல், வீண் வார்த்தைகளும் இல்லாமல், அழகான சந்தத்தில் நேராகவும் உறுதியாகவும் அமைந்திருக்கிறது; தேவையற்ற உவமைகளும், அடுக்கு வார்த்தைகளும், பொருளற்ற சொற்றொடர்களும் குழப்பம் தரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதங்களும் அங்கு இல்லை, மூளையைக் கலக்கும் இழிவு நிலையின் அறிகுறிகள் இல்லை, இத்தகையவற்றை உபநிடதங்களில் காணவும் முடியாது. உபநிடதங்கள் மனிதர்களால் உண்டாக்கப்பட்டிருக்குமானால், இவற்றை உண்டாக்கிய மனித சமுதாயம் அளவற்ற சக்தி உடையதாகத்தான் இருந்திருக்க வேண்டும்.

வலிமை, அளவற்ற வலிமை; இதையே உபநிடதங்களில் ஒவ்வொரு பக்கமும் எனக்குக் கூறுகின்றன. இந்த ஒரு மகத்தான விசயத்தை நீங்கள் எப்பொழுதும் நினைவில்வைத்துக்கொள்ள வேண்டும்; அதுதான் நான் என் வாழ்க்கையில் கற்றுக்கொண்ட பெரிய பாடம் 'ஏ மனிதனே! அளவற்ற வலிமையுடன் இரு. பலவீனம் உனக்கேற்றதல்ல' இதையே உபநிடதங்கள் உபதேசிக்கின்றன. 'மனிதனில் பலவீனத்திற்கு இடம் இல்லையா?' என்று மனிதன் கேட்கிறான். உண்டு, ஆனால் பலவீனத்தால் அதிக பலவீனத்தை போக்க முடியுமா? அழுக்கால் அழுக்கை கழுவ முடியுமா? பாவத்தால் பாவம் தொலையுமா? அதுபோல் பலவீனத்தால் பலவீனம் போகுமா, என்று உபநிடதங்கள் கேட்கின்றன. "ஏ மனிதனே! வலிமை, அளவற்ற வலிமை உனக்கு வேண்டும், எழுந்து நின்று வலிமை பெறு" என்று அவை சொல்கின்றன. உலக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுவதிலும் இந்த ஒரு நூலில் மட்டுமே 'அபீ: பயத்தை அகற்றி ஆண்மையோடிரு' என்ற வார்த்தை மீண்டும் மீண்டும் உபயோகப்படுத்தப் பட்டிருக்கிறது. கடவுளுக்கோ மனிதனுக்கோ இந்தச் சொல் வேறு எந்த சாஸ்திரத்திலும் உபயோகப்படுத்தப்படவில்லை.

என் மனத்தில் இப்போது பழங்காலத்துக் காட்சி ஒன்று விரிகிறது. மேலை நாட்டில் பெரிய சக்கரவர்த்தியாக விளங்கிய அலெக்சாண்டர் நம் சிந்து நதிக்கரையில் நின்று கொண்டிருக்கின்றேன். அங்கு காடுகளில் வசிக்கும் நம் துறவி ஒருவரிடம் அவன் பேசிக் கொண்டிருக்கும் தோற்றம் என் கண்முன் தெரிகிறது. அவனுடன் பேசிக்கொண்டிருக்கும் வயோதிகத் துறவி எந்த உடையுமில்லாமல், நிர்வாணமாக, ஒரு கல்லின் மேல் அமர்ந்திருக்கிறார் அவருடைய ஞானத்தைக் கண்டு வியந்த சக்கரவர்த்தி அவரைத் தமது நாட்டிற்கு (கிரீசுக்கு) வரும் படி தூண்டுகிறான். அதற்காக பொன்னும் பொருளும் தருவதாக கூறுகிறார். ஆனால் அந்த வயோதிகரோ அவனுடைய பொற்காசுகளையும் கேட்டுப் புன் சிரிப்பு சிரித்து, அவனது ஆசைக்கு இணங்க மறுத்துவிடுகிறார். சக்கரவர்த்திக்கு கோபம் வந்துவிடுகிறது. தான் அரசன் என்ற தோரணையில் நிமிர்ந்து நின்று, 'நீ வராவிடில்' உன்னைக்கொல்வேன்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கிறான். அவர் இதைக் கேட்டுக் கலகலவென்று சிரித்து விட்டார் "மன்னா, இதுபோன்ற பொய்யை நீ ஒரு நாளும் சொன்னதில்லை. யார் என்னைக் கொல்ல முடியும்? ஏ உலகாளும் சக்கரவர்த்தியே! நீயா என்னைக் கொல்லப் போகிறாய்? அது ஒரு நாளும் முடியாது. ஏனெனில்நான் பிறப்பும் இறப்புமற்ற ஆன்மா. நான் பிறக்கவுமில்லை, இறக்கப்போவதுமில்லை, நான் எல்லையற்றவன், சர்வ சக்தி வாய்ந்தவன். நீ என்னைக் கொல்கிறேன் என்று சொல்வது குழந்தை பேசும் அறியாப் பேச்சல்லவா?"

இதுவல்லவா வலிமை! இதுவல்லவா சக்தி! நண்பர்களே! சகோதரர்களே, உபநிடதங்களை அதிகம் படிக்கப் படிக்க நான் உங்களுக்காக அதிகம் கண்ணீர் சிந்துகிறேன். நாம் பலம் பெறுவதற்கு வழி அவற்றுள் சொல்லப்பட்டிருக்கிறது. நாம் வேண்டுவது வலிமை, வலிமைதான். அதை யார் நமக்கு கொடுப்பார்கள்? நம்மை பலவீனப்படுத்துவதற்கு ஆயிரக் கணக்கானவர்கள் இருக்கிறார்கள். நாம் இதுவரை கேட்ட கதைகள் போதும்.

உலகின் புத்தகசாலைகளில் முக்கால் பங்கை நம் புராணக் கதைகளால் நிரப்பி விடலாம். நம்மைப் பலவீனப்படுத்தும் அனைத்திற்கும் கடந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரம் வருடங்களாக நாம் இடம் கொடுத்து விட்டோம். எப்படி நமது தேசிய வாழ்க்கையைப் பலவீனப்படுத்துவது என்ற ஒரே நோக்கத்துடன் நாம் இருந்து வந்திருக்கிறோம். அதன் பலனாக நம்மைக் கேவலமாக நினைத்து, காலால் மிதிக்கக் கூடிய புழுக்களின் நிலைக்கு நாம் இப்போது வந்துவிட்டோம். எனவே என் அருமைச் சகோதரர்களே, உங்களில் ஒருவனாகிய நான், உங்களுடன் வாழ்ந்து இறப்பவன் என்ற முறையில் உங்களுக்குச் சொல்கிறேன், கேளுங்கள்: நாம் வேண்டுவது வலிமை, வலிமை மட்டுமே. ஒவ்வொரு துறையிலும் அளவற்ற வலிமை வேண்டும். உபநிடதங்கள் அளவற்ற வலிமையைக் கொடுக்கும் சுரங்களாக இருக்கின்றன. உலகம் முழுவதற்கும் வலிமை அளிக்கக்கூடிய சக்தி அவற்றில் இருக்கின்றன. அவற்றின் மூலம் உலகம் முழுவதற்கும், புத்துயிரும் புது உணர்ச்சியும் புதுசக்தியும் அளிக்க முடியும். எல்லா நாடுகளிலும் எல்லா மதங்களிலும் இருக்கும் பலவீனர்களையும் தாழ்த்தப்பட்டவர்களையும் துன்பத்தால் அழுந்தியவர்களையும் அவை பேரிகை கொட்டி, அழைத்து, 'ஆண்மையுடன் எழுந்து நின்று விடுதலை அடையுங்கள்' என்று உரக்க கூறுகின்றன. மனத்திற்கு, உடலுக்கு, ஆன்மாவிற்கு விடுதலை, பூரண சுதந்திரம் இவையே உபநிடதங்களின் மூல மந்திரங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உலகிலேயே இந்த ஒரு சாஸ்திரம்தான் சுவர்க்கத்தைப் பற்றிப் பேசாமல், மனிதனுடைய விடுதலையைப் பற்றிச் சொல்கிறது. இயற்கையின் தளைகளிலிருந்து விடுதலையடையுங்கள், பலவீனத்திலிருந்து விடுதலை பெறுங்கள் என்று அது கூறுகிறது. இந்தச் சுதந்திரம் உங்கள் உள்ளத்தில் ஏற்கனவே இருக்கிறது என்பதையும் அது காண்பிக்கிறது. இது அதன் மற்றொரு சிறப்பு அம்சமாகும். இந்தக் கொள்கை அத்வைதத்திற்கு மட்டும் உரிய ஒன்றல்ல. துவைதிகளும் ஆன்மாவின் பூரணத் தன்மையை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். வினைப்பயன்களின் காரணமாக அந்தப் பூரணத்துவம் மறைந்திருப்பதாக அவர்கள் சொல்கிறார்கள். ஸ்ரீராமனுஜரின் விசிஷ்டாத்வைதத் கொள்கையினர், ஆன்மா மலர்கிறது அல்லது கூம்புகிறது என்கிறார்கள். இது தற்கால பரிணாமவாதிகள் சொல்வதை முற்றிலும் ஒத்திருக்கிறது. ஆன்மா கூம்பியிருக்கும் போது, அதன் சக்தி அதனுள்ளயே அடங்கியிருக்கிறது. நற்செயல்களும் எண்ணங்களும் அதை மலரச் செய்து, பூரணத்தை வெளிப்படுத்துகின்றன. பரிணாமம் இயற்கையில் இருப்பதாக ஒப்புக் கொள்கிறானே தவிர ஆன்மாவில் இருப்பதாக அத்வைதி ஒப்புக் கொள்வதில்லை. ஒரு திரையிருப்பதாக வைத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கிறோம். அதில் ஒரு துளையிருக்கிறது. நான் திரையின் அந்தப் பக்கத்திலிருந்து இந்தப் பெரிய கூட்டத்தைப் பார்க்கிறேன். நான் சிலரைத்தான் பார்க்க முடியும். துவாரம் பெரிதாகப் பெரிதாக இந்தக் கூட்டத்தின் அதிகமான பகுதியைப் பார்க்கலாம். திரை முற்றிலும் விலகி விட்டால் கூட்டம் முழுவதையும் பார்ப்பேன். இதில் நானும் மாறவில்லை, நீங்களும் மாறவில்லை, மாறுதல் அனைத்தும் திரையில் தான் இருந்தது. பரிணாமத்தைப் பற்றி அத்வைதி சொல்வது இதுதான். இயற்கை என்னும் திரை நீங்குகிறது; ஆன்மா வெளிப்படுகிறது. ஆன்மா என்றும் சுருங்கவோ விரியவோ செய்யாமல் எல்லையற்றிருக்கிறது. மாயையால் ஆன்மா லேசாக மறைக்கப்பட்டிருக்கிறது. இந்த மாயைத் திரையின் கனம் குறையக் குறைய ஆன்மாவில் புதைந்திருக்கும் அதன் இயல்பான தன்மை வெளிப்படுகிறது.

இந்தச் சிறப்பான தத்துவத்தை இந்தியாவிடமிருந்து அறிந்து கொள்ள உலகம் காத்துக்கொண்டிருக்கிறது. யார் என்ன வேண்டுமானாலும் கூறட்டும்; தற்பெருமை பேசிக் கொள்ளட்டும். இந்தக் கொள்கையை ஒப்புக் கொள்ளாமல் எந்தச் சமுதாயமும் பிழைத்திருக்க முடியாது, என்பதை அவர்கள் நாளா வட்டத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்து கொள்வார்கள். எல்லா விஷயங்களைப் பற்றிய கருத்துக்களும் இப்பொழுது மாறி வருவதை நீங்கள் கவனிக்கவில்லையா? முன் காலத்தில் ஒன்று நல்லதென்று நிரூபிக்கப்படுகிற வரையில் அதைக் கெட்டதென்று நினைப்பது பழக்கமாயிருந்தது. கல்வி முறையிலும், குற்றவாளிகளைத் தண்டிப்பதிலும், பைத்தியக்காரர்களை நடத்துவதிலும், நோய்களுக்குச் சிகிச்சை செய்வதிலும் இது தான் பழைய விதியாக இருந்தது. புதிய விதி என்ன? ஆரோக்கியமாயிருப்பது உடம்பின் இயல்பு. அது தன்னைத் தானே குணப்படுத்திக் கொள்கிறது; மிஞ்சிப் போனால் உடலிலிருக்கும் சக்தியைக் காப்பாற்றத்தான் மருந்து உதவ முடியும், அவ்வளவு தான் என்கிறது புதிய விதி. குற்றவாளிகளை நடத்துவதைப் பற்றித் தற்காலச் சட்டம் என்ன சொல்கிறது? அவன் எவ்வளவு கேவலமானவன் ஆனாலும் அவனது உள்ளத்தில் தெய்வீகம் அல்லது உயர்ந்த தன்மை இருக்கிறது. அதைக்கருத்தில் கொண்டே அவனை நடத்த வேண்டும் என்கிறது அந்தச் சட்டம். தற்காலத்தில் இவ்வாறு கருத்துக்கள் மாறி வருவதால் சீர்திருத்தப் பள்ளிகளும் பிறவும் கட்டப்படுகன்றன. ஒவ்வொரு மனிதனும் தெய்விகம் உள்ளது என்ற இந்தியக் கருத்து பிற நாடுகளிலும் எல்லாத் துறைகளிலும் புகுந்து, அவர்கள் அறிந்தோ அறியாமலோ வேலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துவருகிறது. அதன் விளக்கம் உங்கள் சாஸ்திரங்களில்தான் உள்ளன. இதை மாற்ற மக்கள் ஒப்புக் கொண்டுதானாக வேண்டும். இதனால் ஒருவர் மற்றொருவரிடம் நடந்து கொள்ளும் முறையையும், மக்களின் பலவீனத்தையே சுட்டிக் காண்பிக்கும் பழைய பழக்கமும் மாறும்; மாறியே தீரவேண்டும். இந்தத் தவறுகள் எல்லாம் இந்த நூற்றாண்டிற் குள்ளேயே மரண அடி வாங்கிவிடும். நாம் தவறு செய்கிறோம் என்று இப்பொழுது பலர் சொல்லாம். பாவம் என்ற ஒன்று இல்லை என்ற காட்டு மிராண்டித்தனமான கருத்தை நான் பிரசாசம் செய்வதாக உலகின் ஓர் எல்லையிலிருந்து மற்றோர் எல்லைவரை என்னைச் சிலர் தூற்றுகிறார்கள் அல்லவா? ஆனால் நான் தெய்வீகத்தன்மையை உபதேசித்தவன் என்று இவர்களின் சந்ததியே என்னைப் போற்றப் போகிறது. மக்களின் பாவத்தைப் பற்றி பேச நான் வரவில்லை; அவர்களின் தெய்வீகத்தன்மையைப் பற்றிப் பேசவே வந்திருக்கிறேன். இருளைப் பற்றியல்ல, தெய்விக ஒளியைப் பற்றிப் பேசுவதில் பெருமை கொள்கிறேன். உபநிடதங்களிலிருந்து உலகம் அறிந்து கொள்ளக் காத்திருக்கும் இரண்டாவது பெரிய கருத்து, பிரபஞ்சம் முழுவதும் ஒன்று என்னும் உண்மை. ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டைப் பிரித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருந்த எல்லைகள் இப்போது மறைந்து கொண்டிருக்கின்றன. மின்சாரமும் நீராவியும் உலக முழுவதும் தொடர்பு சாதனங்களை உண்டு பண்ணியிருக்கின்றன. எனவே மற்ற நாடுகளில் பிசாசுகள் வசித்துக் கொண்டிருப்பதாக நம் நாட்டினர் நினைக்க முடியாது. மற்ற நாட்டினர்களும் இந்தியாவில் காட்டுமிராண்டிகள் வசித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. நாம் வெளிநாடுகளுக்குச் சென்றால் அங்கு நம் நாட்டைப் போலவே நமக்கு உதவியும் அன்பும் தரும் சகோதர மனிதனைச் சந்திக்கிறோம். சில சமயங்களில் நம் நாட்டிலிருப்பவர்களை விட நல்ல மனிதர்களைச் சந்திக்கிறோம். அவர்கள் இங்கு வரும்போதும் இதே சகோதரத்துவத்தைக் காண்கிறார்கள்.

எல்லா விதமான துன்பங்களுக்கும் காரணம், அறியாமை என்று நமது உபநிடதங்கள் கூறுகின்றன. சமுதாய ஆன்மிக அல்லது மற்றெந்தத் துறையிலும் இது முற்றிலும் உண்மை. அறியாமையின் காரணமாகத்தான் நாம் ஒருவரை ஒருவர் வெறுக்கிறோம். அறியாமையின் காரணமாகவே நாம் ஒருவரை ஒருவர் தெரிந்து கொள்வதுமில்லை; நேசிப்பதுமில்லை. ஒருவரை ஒருவர் நன்றாகத் தெரிந்துகொண்டதும் அன்பு பிறக்கிறது. ஏனெனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் அனைவரும் உண்மையில் ஒன்றல்லவா? இப்படி ஒற்றுமை உணர்ச்சி தானாகவே உண்டாவதைக் காண்கிறோம். அரசியல், சமுதாய உலகிலும்கூட, இருபது வருடங்களுக்கு முன் தேசியப் பிரச்சனைகளாக இருந்தவை இப்போது உலகப் பிரச்சனையாக மாறியிருக்கின்றன. அவையும் இந்த நோக்குடன் அணுகாமல் தீர்க்க முடியாத அளவிற்குப் பெரிதாகிவிட்டன. சர்வதேச சங்கங்கள், பல நாடுகள் சேர்ந்து ஒன்றாக சில விடங்களில் ஈடுபடுதல், சர்வதேச சட்டங்கள் இவ்வாறு உலக ஒற்றுமையை வெளிப்படுத்தக்கூடிய பல அம்சங்கள் இப்போது தோன்றிக்கொண்டிருக்கின்றன. உலகம் முழுவதும் ஒன்றென்பதை இவை நிரூபிக்கின்றன. விஞ்ஞானம் படிப்பவர்களும் இதே முடிவுக்குத்தான் வந்துகொண்டிருக்கிறார்கள். சடப்பொருள் என்ற நிலையில் இயற்கை முழுவதும் ஒரே கடலாகவும் அதில் நீங்கள், நான், சூரியன், சந்திரன் முதலிய அனைவரும் சிறுசிறு சுழல்களாகவும் கருதப்படுகிறோம். மன உலக நிலையில் பார்த்தால் ஓர் எல்லையற்ற எண்ணக் கடலில் நீங்களும் நானும் சதிவலைகளாக இருக்கிறோம். ஆன்மாவாகப் பார்த்தால் நாம் அனைவரும் ஒரே எல்லையற்ற, மாறுதலற்ற பரம்பொருளாக இருக்கிறோம். மனிதன் நன்னெறியைப் பின்பற்றி நடக்க வேண்டுமென்று எல்லா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாஸ்திரங்களும் கூறுகின்றன. ஏன்? அதன் அடிப்படையான தத்துவம் என்னவென்பதைப் பற்றி உலகம் அறிந்து கொள்ள விரும்புகிறது. அவர்கள் வேண்டும் அனைத்தும் நம் சாஸ்திரங்களில்தான் கிடைக்கும்.

இந்தியாவில் நமக்கு தேவையானது எது? சிறப்பு வாய்ந்த இந்தக் கருத்துக்கள் பிற நாட்டினருக்குத் தேவையானால், நமக்கு இருபது மடங்கு தேவை. ஏனெனில் நாம் ஒப்பற்ற உபநிடதங்களைப் பெற்றவர்களாயிருந்தும், நாம் மகரிஷிகளின் பரம்பரையில் பிறந்தவர்கள் என்று பெருமையடித்துக் கொண்டிருந்த போதிலும், மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டு பார்த்தால் நாம் பலவீனர்களாக, மிக மிக பலவீனர்களாக இருக்கிறோம். இதை நான் கண்டிப்பாகக் கூறியே ஆகவேண்டும். முதலில் நமது உடல் பலவீனம். நமது துன்பங்களில் சுமார் மூன்றில் இரண்டு பங்குக்கு நமது உடல் பலவீனமே காரணமாயிருக்கிறது. நாம் சோம்பேறிகள், நம்மால் உழைக்க முடிவதில்லை, நம்மால் சேர்ந்து வாழ முடிவதில்லை. நாம் ஒருவரை ஒருவர் நேசிப்பதில்லை, நம்மிடம் சுயநலம் நிறைந்திருக்கிறது. ஒருவருக்கொருவர் சண்டையிடாமலும் பொறாமைப படாமலும் மூன்று பேர்கள் சேர்ந்து வாழ முடிவதில்லை எந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதமானக் கட்டுப்பாடும் இல்லாமல், சுயநலம் நிறைந்து, நெற்றியில் குறியை இப்படிப் போடுவதா அப்படிப் போடுவதா என்பதைப் பற்றி நூற்றுக் கணக்கான வருடங்களாகச் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறோம். ஒருவன் பார்த்து விட்டால் உணவு கெட்டு விடுகிறதா என்பது போன்ற அற்ப விஷயங்களை மகத்தானவைகளாக கொண்டு பல புத்தகங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. இதைத்தான் சென்ற சில நூற்றாண்டுகளாக நாம் செய்து வைத்திருக்கிறோம். இவ்வளவு 'அழகான, அற்புதமான' ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருக்கும் மக்களிடம் உயர்ந்த எதைத்தான் எதிர்பாக்க முடியும்? இது நமக்கு அவமானம் இல்லையா? ஆம், சில வேளைகளில் அவமானம் வரத்தான் செய்கின்றது. அற்பமாக நினைத்தாலும், இவற்றை நம்மால் விட முடிவதில்லை. நாம் கிளிப் பிள்ளைகள் போல் பலவற்றைப் பற்றிப் பேசுகிறோம்; ஆனால் படி செய்வதில்லை. பேசுவதும் அதன் படி செய்யாமல் இருப்பதும் நமக்கு வழக்கமாக போய்விட்து. இதற்கு காரணமென்ன? நமது உடல் பலவீனம். வலுவற்ற இத்தகைய மூளையால் எதையும் செய்ய முடிவதில்லை. அதைப் பலப்படுத்த வேண்டும்.

முதலில் நமது இளைஞர்கள் வலிமை பெற்றவர்களாக வேண்டும். மத உணர்ச்சி அதற்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னரே வரும். எனது வாலிப நண்பர்களே! வலிமை பெறுங்கள். அதுதான் நான் உங்களுக்குக் கூறும் அறிவுரை. நீங்கள் கீதையைப் படிப்பதைவிட கால்பந்தாடுவதன் மூலம் சுவர்க்கத்திற்கு அருகில் எளிதாகச் செல்ல முடியும். இவை தைரியமான வார்த்தைகள். இருப்பினும் உங்களுக்கு இவற்றைச் சொல்ல வேண்டியிருக்கிறது. ஏனெனில் நான் உங்களை நேசிக்கிறேன். பிரச்சினை எங்கு என்பது எனக்குத் தெரியும். எனக்கு கொஞ்சம் அனுபவமிருக்கிறது. உங்கள் கை, கால், தசைகளில் இன்னும் கொஞ்சம் வலிமை வந்தால், கீதையை இன்னும் நன்றாகப் புரிந்து கொள்ள முடியும். உங்கள் ரத்தத்தில் வேகமிருந்தால் ஸ்ரீ கிருஷ்ணனின் அளவற்ற அறிவையும் ஆற்றலையும் நீங்கள் நன்றாக அறிய முடியும். நீங்கள் உங்கள் சொந்தக் கால்களில் நிமிர்ந்து நின்று, ஆண்கள் என்ற உணர்ச்சி உங்களுக்குத் தோன்றும் போதுதான் நீங்கள் ஆன்மாவின் மகத்துவத்தையும் உபநிடதங்களின் தத்துவங்களையும் நன்றாக அறிந்து கொள்ள முடியும். இப்படியே நமது வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் இவற்றைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

நான் அத்வைதத்தையே உபதேசம் செய்வதாகச் சிலர் அதிருப்திப்படுகிறார்கள். நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்வைதத்தையோ துவைதத்தையோ வேறு எந்தத் தத்துவத்தையுமோ பிரசாரம் செய்ய விரும்பவில்லை. நமக்கு இப்போது தேவையான தத்துவமெல்லாம் ஆன்மா பற்றிய அற்புதமான கருத்துத்தான். அதாவது அதன் அழிவற்ற சக்தி; எல்லையற்ற தூய்மை, குறைவற்ற பூரணத்துவம். எனக்கு ஒரு குழந்தை இருந்தால், அதைப் பிறவியிலிருந்தே 'நீ அந்தத் தூய ஆன்மா' என்று சொல்லியே வளர்ப்பேன். நமது புராணம் ஒன்றிலுள்ள ராணி மதாலசாவின் அற்புதமான கதையை நீங்கள் கேட்டிருப்பீர்கள். தனக்கு ஒரு குழந்தை பிறந்ததும், அதைத் தொட்டிலில் இட்டு தாலாட்டி, 'நீ அந்தத் தூய ஆன்மா; நீ களங்கமற்ற, பாவமில்லாத, சர்வசக்தி வாய்ந்த, மகத்தான ஆன்மாவின் சொரூபம்' என்று அவள் பாடினாளாம். இதில் பெரிய கருத்து அடங்கியுள்ளது. உங்களை மேன்மையானவர்கள் என்று நினையுங்கள்; அப்படியே ஆவீர்கள்.

உலகம் முழுதும் சுற்றியதால் எனக்கு ஏன் அனுபவம் கிடைத்தது? ஆங்கிலேயர்கள் தங்களைப் பாவிகள் என்று சொல்லலாம். ஆனால் அதை உண்மையாக நம்புவார்களானால் அவர்கள் மத்திய ஆபிரிக்க நீக்ரோக்களை விட மேலானவர்களாக இருக்க முடியாது. ஆனால் அவர்கள் அவ்விதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பவில்லை என்பதற்காக, ஆண்டவன் அவர்களை ஆசீர்வதிக்கட்டும். அதற்குப் பதிலாக ஒவ்வோர் ஆங்கிலேயனும், தான் உலகத்தை ஆளப்பிறந்தவனென நினைக்கிறான், தான் மேலானவன் என்றும் தன்னால் எதையும் செய்ய முடியுமென்றும் நினைக்கிறான்; தான் விரும்பினால் சந்திர, சூரிய மண்டலங்களுக்கும் போக முடியும் என நம்புகிறான். இந்த நம்பிக்கைதான் அவனை பெரியவனாக்குகிறது. தன்னைப் பாவி என்றும், தான் மீளா நரகத்தில் என்றென்றும் அவதிப் படவேண்டியவன் என்றும் பாதிரி கூறியதை அவன் நம்பியிருந்தால், அவன் இன்றைய ஆற்றல் மிக்க ஆங்கிலேயன் ஆகியிருக்க முடியாது.

ஒவ்வொரு நாட்டிலும் இந்தப் புரோகிதர்களையும் குருட்டு நம்பிக்கைகளையும் மீறி மக்கள் மனத்திலிருக்கும் தெய்விக சக்தி வெளிப்படத்தான் செய்கிறது. நாம் நம்பிக்கையை இழந்துவிட்டோம். நாம் சொல்வதை நம்புங்கள். ஓர் ஆங்கிலேயனுக்கிருப்பதில் ஆயிரத்திலொரு பங்கு நம்பிக்கை கூட நம்மிடமில்லை. இவை மிகவும் வெளிப்படையான, ஆனால் வருத்தம் தரக்கூடிய வார்த்தைகள்; இவற்றை என்னால் தவிர்க்க முடியாது. ஓர் ஆங்கிலேயன், அல்லது ஆங்கிலப் பெண் நமது மத லட்சியங்களை ஏற்றுக்கொண்டால், அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதில் ஆழ்ந்து மூழ்கி அதன் ஓர் எல்லைக்கே சென்று விடுகின்றனர். அரச பரம்பரையினராக இருந்தாலும் தங்கள் மதத்தினரும் சுற்றத்தாரும் தங்களை மிக கேவலமாகக் கேலி செய்தாலும் அவற்றைச் சற்றும் பொருட்படுத்தாமல் நம் நாட்டிற்கு வந்து நம் மதத்தை, நமக்கே போதிக்கப்படுவதை நீங்கள் காணவில்லையா? உங்களில் எத்தனை பேர் அவ்விதம் செய்ய முடியும்? நீங்கள் ஏன் அவ்விதம் செய்ய முடியாது? உங்கள் மதத்தைப்பற்றி உங்களுக்கு தெரியாதா? அவர்களைவிட உங்களுக்கு அதிகம் தெரியும். ஆனால், தேவையானதை விட அதிகம் தெரிந்துவிட்டது! அதுதான் உங்கள் கஷ்டம்! நீங்கள் அவ்விதம் செய்ய முடியாததற்குக் காரணம் உங்கள் ரத்தம் வெறும் தண்ணீர்; மூளை வலு விளந்துவிட்டது; உடல் பலமற்றுள்ளது. நீங்கள் இந்த உடம்பை மாற்றிக் கொள்ள வேண்டும். உடலின் பலவீனம்தான் இதற்குக் காரணம்; வேறொன்றும் அல்ல. சென்ற நூறு வருடங்களாகச் சீர்திருத்தங்களைப் பற்றியும் லட்சியங்களைப் பற்றியும் வெறும் பேச்சுப் பேசிக் கொண்டேயிருந்திருக்கிறீர்கள். ஆனால் அவற்றைச் செயல் முறையில் கொண்டுவர வேண்டிய வேளை வரும்போது உங்களைக் காணமுடியவில்லை. இதைக் கண்டு உலகமே உங்களை எள்ளி நகையாடுகிறது;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்திருத்தம் என்ற பெயரே கேலிக் கூத்தாகிவிட்டது. இதற்கெல்லாம் காரணம் என்ன? காரணம் உங்களுக்குத் தெரியாதா, என்ன? நீங்கள் பலவீனமாயிருப்பதே இவை அனைத்திற்கும் காரணம். உங்கள் உடல் பலவீனமாயிருக்கிறது; உங்கள் மனம் பலவீனமாயிருக்கிறது. உங்களிடமே உங்களுக்கு நம்பிக்கையில்லை.

என் சகோதரர்களே! ஆயிரக்கணக்கான வருடங்களாக ஜாதிக் கொடுமையும், அரசர் கொடுங்கோன்மையும், அன்னியர் அரசாட்சியும் உங்கள் பலத்தை எல்லாம் போக்கிவிட்டன. உங்கள் முதுகெலும்பு உடைந்து, இப்போது வெறும் புழுக்கள் போலாகி விட்டீர்கள். யார் உங்களுக்கு வலிமையைக் கொடுப்பார்கள்? வலிமை, அளவற்ற வலிமைதான் நமக்கு இப்போது தேவை. இத்தகைய வலிமை பெறுவதற்கு முதல்படி உபநிடதங்களை அடைந்து, நாம் ஆன்மா என்று நம்புவதுதான். 'என்னைக் கத்தி வெட்டாது' ஆயுதங்கள் துளைக்காது, நெருப்பு எரிக்காது, காற்று உலர்த்தாது, நான் சர்வ சக்தி வாய்ந்தவன். சர்வ ஞானம் படைத்தவன்' என்ற இந்த அதி அற்புதமான, நம்மைக் காப்பாற்றக்கூடிய வார்த்தைகளை மீண்டும் மீண்டும் சொல்லுங்கள். நம்மைப் பலவீனர்களென்று சொல்லாதீர்கள். நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பும் எதையும் சாதிக்க முடியும். நம்மால் செய்ய முடியாதது ஒன்றுமில்லை என்று நினையுங்கள்; நம்புங்கள். நாம் அனைவரும் அந்த மகத்தான ஆன்மாவை உடையவர்கள் என்பதை நம்புவோம், நசிகேதனைப்போல் அளவற்ற நம்பிக்கை பெறுவோம். தந்தை செய்த யாகத்தின் போது நசிகேதனுக்கு நம்பிக்கை பிறந்தது. அத்தகைய நம்பிக்கை உங்கள் ஒவ்வொருவருக்கும் வரவேண்டுமென நான் விரும்புகிறேன். அப்போது நீங்கள் ஒவ்வொருவரும் மகத்தான சக்தி பெற்று உலகத்தையே கலக்கக்கூடிய அறிவைப் பெறுவீர்கள். நீங்கள் ஒவ்வொருவரும் கடவுள் போன்ற எல்லையற்ற சக்தி பெறுவீர்கள். இத்தகைய பலமும் நம்பிக்கையுமே உபநிடதங்கள் நமக்கு அளிப்பவை.

உபநிடதங்கள்ரகசியமானவை, துறவிகளுக்கு மட்டுமே உரியவை என்று சிலர் கூறுகிறார்கள். உபநிடதங்கள் துறவிகளின் கையிலிருந்தன. அவர்கள் காடுகளில் வசித்து வந்தார்கள். சங்கரர் கொஞ்சம் கருணை வைத்து இல்லறத்தார்களும் அவற்றைப் படிக்கலாம் என்றார். எனினும் அவை துறவிக்கு வேண்டியவற்றை மட்டுமே சொல்கிறான் என்று மக்கள் நம்பி வந்தார்கள். ஆனால் நான் முன்னர் கூறியதுபோல் வேதங்களுக்கு அதிகாரபூர்வமாக ஒரே விளக்கத்தை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதப் பொருளான கிருஷ்ண பகவானே எல்லாக் காலத்திற்குமாக, முடிவாகக் கீதையில் சொல்லியருளியிருக்கிறார். அவை எல்லா மக்களுக்கும் எல்லா தொழிலாளர்களுக்கும் உரியவை. வேதாந்தத்தின் இந்த உயர்ந்த கருத்துக்கள் காடுகளிலும் குகைகளிலும் வசிக்கும் துறவிகளிடம் மட்டுமன்றி, உலகெங்கும் பரவி ஏழைகள், மீனவர்கள், மாணவர்கள் மற்ற அனைவரிடமும் குடிகொள்ளவேண்டும். எந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பினும், ஆண் பெண் குழந்தை முதலிய அனைவரையும் அவை கூவி அழைக்கின்றன. இதைக்கேட்டு யாரும் பயப்பட வேண்டியதில்லை. மீனவர்களும் பிறரும் எப்படி உபநிடத லட்சியங்களை வாழ்க்கையில் பின்பற்ற முடியும்? இதற்கு வழி காண்பிக்கப்பட்டிருக்கிறது. ஆன்மிக சக்தி எல்லையற்றது. நீங்கள் சிரத்தையுடன் அதற்காக முயற்சி செய்கிற அளவு, அதன் பயனைப் பெறுவீர்கள். சிறு அளவில் ஆனாலும் சிரத்தையுடன் செய்தால், அது அற்புதமான பலனை அளிக்கும். ஆதலால் ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற அளவு சிரத்தையுடன் முயற்சி செய்யட்டும். மீன் பிடிப்பவன் தன்னை ஆன்மாவென நினைத்தால் அவன் இன்னும் திறமையுள்ள மீனவன் ஆவான். மாணவன் தன்னை ஆன்மாவென நினைத்தால் அவன் இன்னும் ஆற்றல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்த மாணவன் ஆவான். ஒரு வக்கீல் தன்னை ஆன்மாவென நினைத்தால் அவன் இன்னும் சிறந்த வக்கிலாவான். இவ்விதம் எல்லா இனத்தவரும் மக்களும் இதன் மூலம் மேன்மையுறுவார்கள்.

மனிதச் சமுதாயம் இயல்பாகவே பல பிரிவுகளாகப் பிரிந்துள்ளது. ஆனால் அவற்றில் ஏதாவது ஒரு பிரிவினருக்குத் தனி உரிமையிருந்தால் அது தொலைய வேண்டும். ஜாதி என்பது இயல்பான ஒன்று. சமுதாய வாழ்வில் நான் ஒரு தொழில் செய்யலாம். நீங்கள் வேறொன்று செய்யலாம். நீங்கள் அரசாளலாம். நான் செருப்புத் தைக்கலாம். ஆனால் அதன் காரணமாக நீங்கள் உயர்ந்தவர்கள் என்று சொல்ல முடியாது. என்னால் நாட்டை ஆள முடியாமலிருக்கலாம். ஆனால் உங்களால் செருப்பு தைக்க முடியுமா? நான் செருப்பு தைக்கலாம்; நீங்கள் வேதம் படிக்கலாம்; ஆனால் அதன் காரணமாக என்னை ஏறி மிதிக்க உங்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? ஒருவன் கொலை செய்தால் அவனைப் புகழ்வதாம். வேறு ஒருவன் ஒரு பழத்தை திருடினாலும் அவனைத் தூக்கிலிட வேண்டுமாம். ஜாதிப்பிரிவினையை அடிப்படையாகக் கொண்ட இந்த அக்கிரமங்கள் ஒழிய வேண்டும். மனிதர்கள் பல பிரிவுகளாக வாழ்வது நல்லது, அது வாழ்க்கையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பு. அதை எவரும் தடுக்க முடியாது. உலகம் முழுவதும் சென்றாலும் ஜாதிகளும் பிரிவுகளும் இருக்கக் காண்போம். ஆனால் அதன் காரணமாக யாருக்கும் தனி உரிமை இருக்கவேண்டிய அவசியமில்லை. இந்தத் தனி உரிமைகளின் தலையிலடித்து அவற்றை ஒழிக்க வேண்டும். மீன் பிடிப்பவனுக்கு வேதாந்தம் கற்பித்தால் அவன், 'நீ எவ்வளவு நல்ல மனிதனோ அவ்வளவு நல்ல மனிதன் நானும். நான் மீன் பிடிப்பவனாய் இருக்கலாம். நீ தத்துவ ஞானியாக இருக்கலாம். ஆனால் உன்னுள்ளத்திலிருக்கும் கடவுள் என்னுள்ளத்தி லிருக்கிறார்' என்று கூறுவான். ஒருவருக்கும் தனி உரிமையில்லை; எல்லோருக்கும் வாழ்க்கையில் முன்னேற ஒரேவிதமான வாய்ப்புகள் கொண்ட ஒரு சமுதாயம்தான் நமக்கு வேண்டும். ஒவ்வொருவரிடமும் தெய்விகத் தன்மை இருக்கிறது என்பதை அவர்களுக்கு கற்பியுங்கள். பின்னர் அவர்களே தங்கள் முன்னேற்றத்திற்கு வழி தேடிக்கொள்வார்கள்.

சுதந்திரமே வளர்ச்சிக்கு முதலில் வேண்டப்படுகிறது. 'இந்தப் பெண் அல்லது அந்தக் குழந்தைக்கு நான் சுதந்திரம் அளிப்பேன்' என்று யாராவது சொல்லத் துணிவார்களானால் அது தவறு, முற்றிலும் தவறு என்று நான் கூறுவேன். விதவைகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினையைப் பற்றியும், பொதுவாகப் பெண்களுடைய நிலையைப் பற்றியும் என்னை அடிக்கடி கேட்கிறார்கள். நான் என்ன விதவையா, பெண்ணா? என்னிடம் இந்த அசட்டுக் கேள்விகளைக் கேட்கிறீர்களே! பெண்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நீங்கள் யார்? விதவைகளையையும் பெண்களையும் ஆளும் கடவுளா நீங்கள்? விலகி நில்லுங்கள்! அவர்கள் தங்கள் பிரச்சினைகளைத் தாங்களே தீர்த்துக்கொள்வார்கள். என்ன ஆணவம்? என்ன அகங்காரம்! ஒருவருக்கு வேண்டிய அனைத்தையும் நீங்கள் செய்ய முடியுமென்று நினைக்கிறீர்களே! விலகி நில்லுங்கள்! ஆண்டவன் எல்லோரையும் பார்த்துக் கொள்வான். உங்களுக்கு எல்லாம் தெரியும் என்று நினைப்பதற்கு நீங்கள் யார்? ஏ, முட்டாள்களே, கடவுளுக்கு மேல் உங்களுக்குத் தெரியுமென்று நினைப்பதற்கு உங்களுக்கு அவ்வளவு தைரியமா? ஏனெனில் ஒவ்வொரு ஜீவனும் அந்தப் பரமாத்மாவைச் சேர்ந்ததென்பது உங்களுக்குத் தெரியாதா? உங்கள் வேலையைப் பாருங்கள். உங்கள் கருமங்களைத் தீர்த்துக் கொள்ளுங்கள். உங்கள் மக்கள் உங்களை உயர்ந்த பீடத்தில் வைத்துப் பெருமைப்படுத்தலாம்; உங்கள் சமுதாயம் உங்களைப் பாராட்டலாம்; அறிவற்ற மூடர்கள் உங்களைப் புகழலாம். ஆனால் ஆண்டவன் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதும் உறங்குவதில்லை. ஒவ்வொருவனும் இந்தப் பிறவியிலோ வேறு பிறவியிலோ தன் வினைகளின் பயனை அனுபவித்தே தீருவான்.

ஒவ்வொரு ஆண், பெண் குழந்தையையும் கடவுளாக எண்ணுங்கள். நீங்கள் யாருக்கும் உதவி செய்ய முடியாது; சேவைதான் செய்ய முடியும். பகவானுடைய குழந்தைகளுக்குச் சேவை செய்யுங்கள். உங்களுக்கு அந்தப் பேறிருந்தால் அதன் மூலம் ஆண்டவனுக்கு சேவை செய்தவர்காளாவீர்கள். அவனுடைய குழந்தைகளுக்கு உதவும் பேற்றை ஆண்டவன் உங்களுக்கு அளிப்பானானால், அதன் மூலம் நீங்கள் அவன் அருள் பெற்றவர்களாவீர்கள். ஆனால் இதன் காரணமாக உங்களைப்பற்றி அதிகம் நினைத்துக்கொள்ள வேண்டாம். மற்றவர்களுக்கு இந்த வாய்ப்பு கிடைக்காமலிருக்க, உங்களுக்கு இது கிடைத்தது ஆண்டவனுடைய அருள் உங்களிடம் இருப்பதற்கு அறிகுறி என்பதை உணருங்கள். இந்தச் சேவையே இறைவனின் வழிபாடு எனச் செய்யுங்கள். எனது நன்மைக்காகவே நான் கடவுளை வழிபடுகிறேன். அதே போல் நம்முடைய நன்மைக்காகவே நாம் ஏழைகளிடம் கடவுளைக் கண்டு வழிபட வேண்டும். தங்களுக்கு சேவைசெய்து அதன்மூலம் பகவானை வழிபடுவதற்கு நமக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்பு அளிப்பதற்காகவே ஏழைகளும் தரித்திரர்களும் தோன்றியிருக்கறார்கள் போலும்! அதற்காகவே பகவானும் நோயாளி, பைத்தியக் காரன், தொழு நோயாளி, பாவி முதலிய வடிவங்களில் தோன்றுகிறான் போலும்! எனது வார்த்தைகள் தைரியமானவை. அவற்றை மீண்டும் சொல்கிறேன். இந்த உருவங்களில் கடவுளை வழிபட நமக்கு வாய்ப்புக் கிடைத்தால் அது எல்லாவற்றிலும் உயர்ந்த உரிமையாகும். மற்றவர்கள் மேல் அதிகாரம் செலுத்தும் எண்ணத்தைவிட்டுவிடுங்கள். மற்றவர்களுக்கு நீங்கள் நல்லது செய்ய முடியும் என்ற எண்ணத்தையும்விட்டுவிடுங்கள். ஒரு செடிக்குச் செய்யக்கூடிய அளவுதான் நீங்கள் ஒருவருக்கு உபகாரம் செய்யலாம். ஒரு விதை வளர்வதற்கு உதவியாக அதற்கு வேண்டிய மண், தண்ணீர், காற்று முதலியவற்றை நீங்கள் கொடுக்கலாம். ஆனால் இவற்றை அதன் இயல்பின்படிதான் அது ஏற்றுக்கொள்ள முடியும். தன் இயல்பின் படி அது இவற்றைக் கிரகித்து வளர்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பாசுரம்

ஸ்ரீ ராம ஜெயம்

"பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு

பலகோடி நூறாயிரம்

மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா

உன் சேவடி செவ்வி திருக்காப்பு"

ஸ்ரீ ராம ஜெயம்

சிவா பதிப்பகம், 05, கனகபுரம், கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org